**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 48/2019**

**Deposition of Witnesses for PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | ரத்தினம் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.02.2020.

முதல் **விசாரணை.**

நான் தற்போது திருச்சி பொன்னம்லை காவல் நிலையத்தில் குற்றப் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.8.2017ம் தேதி அரியமங்கலம் காவல்நிலையத்தில் த.கா. பணியில் இருந்தபோது காலை 11.30 மணிக்கு அரியமங்கலம் காவல் ஆய்வாளருடன் நானும் , த.கா.சுரேஷ் மற்றும் மடிக்கணினி தட்டச்சர் மு.நி.கா.டயானா ஏஞ்சலின் ஆகியோர் தக்க உபகரங்களை எடுத்துக் கொண்டு அரியங்கலம் உட்கடை புங்களாயி அம்மன் கோவில் தெருவில் உள்ள க.எண். 6/33 வீட்டின் பின்புறம் ரகசிய தகவலின் பேரின் கண்காணித்தபோது, ஒரு நபர் பொட்டலத்தைக் கொடுத்து பணம் வாங்கிக் கொண்டிருந்தார். எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்துப் பிடித்து விசாரிக்க தனது பெயர், செல்வம் த.பெ. சுப்பிரமணியம் என்றும் அவரது விலாசத்தைக் கூறினார். அவர்தான் ஆஜர் எதிரி. பின்பு அவரை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம்அழைத்துச் செல்லலாம என கேட்டதற்கு எதிரி நீங்களே சோதனை செய்யலாம் என்றும் சம்மதம் தெரிவித்தார். ஆய்வாளர் சோதனை சம்மதக் கடிதம் தயாரித்து அதில் எதிரியிடம் கையெழுத்து வாங்கினார். பின்பு ஆய்வாளர் எதிரி வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1600 கிராம் இருந்தது. அதனுடன் பொட்டலம் போட பயன்படுத்தும், 100 பாக்கெட் கொண்ட 6 பாக்கெட்டுகள், ஸ்டாப்லர் 1, ஸ்டாப்லர் பாக்கெட் 1, ரோஸ்கலர் பாலித்தின் கவர் 1. கஞ்சா விற்றப் பணம் ரூ 220 இருந்தது. அதை பொதுமக்கள் யாரும் சாட்சியா இருக்க முன்வராததால் நானும், த.கா.சுரேசும் சாட்சிகளாக இருக்க ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் வீதம் 2 பொட்டலங்களை எடுத்து காக்கி கவரில் போட்டு SHO சீல்

வைத்தோம். மீதமுள்ள கஞ்சாவை அதே பாலித்தீன் பாக்கெட்டில் கட்டி SHO சீல் வைத்தோம். சொத்துக்களை கைப்பற்றிய மகஜரில் நானும். த.கா.சுரேசும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரியை காரணம் கூறி ஆய்வாளர் கைது அறிக்கை தயாரித்து கைது செய்தார். சம்பவ இடத்தில் மடிக்கணிணி தட்டச்சர் சம்பவ இடத்தில் சோதனை அறிக்கை , கைது அறிக்கை கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை ஆய்வாளர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்து தயாரித்தார். பொருட்களை கைப்பற்றுதல் மகஜர் **அசாஆ.1.** பின்பு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து வழக்குப் பதிவு செய்ய நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

ஆய்வாளர் என்னை சம்பவத்தன்று சம்பவஇடத்தில் வைத்து விசாரித்தார். நாங்கள் சம்பவ இடத்திற்கு ஆய்வாளரின் ஜீப்பில் போனோம், அதை சிவபதி என்ற த.கா. ஓட்டினார் . நான் மகஜரில் மட்டும் கையொப்பம் செய்தேன். வேறு ஆவணங்கள் எதிலும் கையெழுத்துப் போடவில்லை. மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினோம். மகஜரில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்துப் போட்டேன். எத்தனை மணிக்கு கையெழுத்துப் போட்டேன் என ஞாபகம் இல்லை. மகஜரை 12.15 முதல் 1.மணிக்குள் தயார் செய்தார். கைப்பற்றிய பணம் எத்தனை ரூபாய் நோட்டுக்கள் என ஞாபகம் இல்லை. அழைத்த தனி நபர் சாட்சிகளின் பெயர் விலாசத்தை குறித்து வைக்கவில்லை. நாங்கள் கண்காணித்த இடத்தில் இருந்த வீடு வடக்கு திசையைப் பார்த்த வீடு. அந்த வீடு யாருக்குச் சொந்தமானது என்று எனக்கு தெரியாது. எதிரி வைத்திருந்த ரோஸ்கலர் பையில் எழுத்துக்கள் எதுவும் இல்லை. நான் சொல்வது போல சம்பவம் ஏதும் நடக்கவில்லைஎன்றும் பொருட்களை கைப்பற்றப்படவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த மகஜரில் கையெழுத்துப் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 48/2019**

**Deposition of Witnesses for PW 2**

| Name | : | சுரேஷ் | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.02.2020.

**முதல் விசாரணை.**

_நான் தற்போது திருச்சி கண்டோன்மண்ட் காவல் நிலையத்தில் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் த.கா.பணிபுரிகிறேன். கடந்த 25.8.2017ம் தேதி அரியமங்கலம் காவல்நிலையத்தில் த.கா. பணியில் இருந்தபோது காலை 11.30 மணிக்கு அரியமங்கலம் காவல் ஆய்வாளருடன் நானும் , த.கா.ரத்தினம் மற்றும் மடிக்கணினி தட்டச்சர் மு.நி.கா.டயானா ஏஞ்சலின் ஆகியோர் தக்க உபகரங்களை எடுத்துக் கொண்டு அரியங்கலம் உட்கடை புங்களாயி அம்மன் கோவில் தெருவில் உள்ள க.எண். 6/33 வீட்டின் பின்புறம் ரகசிய தகவலின் பேரின் கண்கானித்தபோது, ஒரு நபர் பொட்டலத்தைக் கொடுத்து பணம் வாங்கிக் கொண்டிருந்தார். எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்துப் பிடித்து விசாரிக்க தனது பெயர், செல்வம் த.பெ. சுப்பிரமணியம் என்றும் அவரது விலாசத்தைக் கூறினார். அவர்தான் ஆஜர் எதிரி. பின்பு அவரை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம்அழைத்துச் செல்லலாம என கேட்டதற்கு எதிரி நீங்களே சோதனை செய்யலாம் என்றும் சம்மதம் தெரிவித்தார். ஆய்வாளர் சோதனை சம்மதக் கடிதம் தயாரித்து அதில் எதிரியிடம் கையெழுத்து வாங்கினார். பின்பு ஆய்வாளர் எதிரி வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 1600 கிராம் இருந்தது. அதனுடன் பொட்டலம் போட பயன்படுத்தும், 100 பாக்கெட் கொண்ட 6 பாக்கெட்டுகள், ஸ்டாப்லர் 1, ஸ்டாப்லர் பாக்கெட் 1, ரோஸ்கலர் பாலித்தின் கவர் 1. கஞ்சா விற்றப் பணம் ரூ 220 இருந்தது. அதை பொதுமக்கள் யாரும் சாட்சியா இருக்க முன்வராததால் நானும், த.கா.சுரேசும் சாட்சிகளாக இருக்க ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றிய கஞ்சாவை பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் வீதம் 2 பொட்டலங்களை எடுத்து காக்கி கவரில் போட்டு SHO சீல்

வைத்தோம். மீதமுள்ள கஞ்சாவை அதே பாலித்தீன் பாக்கெட்டில் கட்டி SHO சீல் வைத்தோம். சொத்துக்களை கைப்பற்றிய மகஜரில் நானும். த.கா.சுரேசும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரியை காரணம் கூறி ஆய்வாளர் கைது அறிக்கை தயாரித்து கைது செய்தார். சம்பவ இடத்தில் மடிக்கணிணி தட்டச்சர் சம்பவ இடத்தில் சோதனை அறிக்கை , கைது அறிக்கை கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை ஆய்வாளர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்து தயாரித்தார். பின்பு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து வழக்குப் பதிவு செய்ய நான் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**கு.வி.**

ஆய்வாளர் என்னை சம்பவத்தன்று சம்பவஇடத்தில் வைத்து விசாரித்தார். நாங்கள் சம்பவ இடத்திற்கு ஆய்வாளரின் ஜுப்பில் போனோம், அதை சிவபதி என்ற த.கா. ஓட்டினார் . நான் மகஜரில் மட்டும் கையொப்பம் செய்தேன். வேறு ஆவணங்கள் எதிலும் கையெழுத்துப் போடவில்லை. மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினோம். மகஜரில் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்துப் போட்டேன். எத்தனை மணிக்கு கையெழுத்துப் போட்டேன் என ஞாபகம் இல்லை. மகஜரை 12.15 முதல் 1.மணிக்குள் தயார் செய்தார். கைப்பற்றிய பணம் எத்தனை ரூபாய் நோட்டுக்கள் என ஞாபகம் இல்லை. அழைத்த தனி நபர் சாட்சிகளின் பெயர் விலாசத்தை குறித்து வைக்கவில்லை. நாங்கள் கண்காணித்த இடத்தில் இருந்த வீடு வடக்கு திசையைப் பார்த்த வீடு. அந்த வீடு யாருக்குச் சொந்தமானது என்று எனக்கு தெரியாது. எதிரி வைத்திருந்த ரோஸ்கலர் பையில் எழுத்துக்கள் எதுவும் இல்லை. நான் சொல்வது போல சம்பவம் ஏதும் நடக்கவில்லைஎன்றும் பொருட்களை கைப்பற்றப்படவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த மகஜரில் கையெழுத்துப் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.